بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்

December 13 2013

தமிழாக்கம் : மவ்லவி N. ஷியாவுல் ஹக் சாஹிப்

# சுய சீர்திருத்தத்தின் அம்சங்கள்

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

நான் கடந்த இரண்டு ஜுமுஆக்களாக செயல் சீர்திருத்தம் தொடர்பான விசயங்களை எடுத்துரைத்து வருகின்றேன். கடந்த ஜுமுஆவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது தொடர்பாக நமக்கு அளித்த போதனைகளின் ஒரு சில விசயங்களைக் கேள்வி வடிவில் எடுத்துரைத்தேன். அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு அளித்த போதனைகள் தொடர்பாக நாம் இதனை செய்கின்றோமா? இல்லையா? எனக் கேள்வி பதில் வடிவில் கேட்டிருந்தார்கள் என எடுத்துரைத்தேன்.

மேலும் நமது செயல் சீர்திருத்தம் இந்த ஒரு சில விசயங்களைப் பேணுவதால் மட்டுமே நிறைவேறி விடாது. இஸ்லாமிய போதனைகளுக்குப் பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. திருக்குர்ஆன் நமக்கு எண்ணற்ற கட்டளைகளை வழங்கியுள்ளது. இதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது போதனைகளில் நமது சீர்திருத்தத்திற்காக மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

நான் உண்மையாகவே உங்களிடம் கூறுகின்றேன். எவர் ஒருவர் திருக்குர்ஆனின் 700 கட்டளைகளில் ஒரு சிறிய கட்டளையைக் கூட மறுப்பாரோ அவர் இரட்சிப்பின் வாயிலைத் தனது கையினால் தானே மூடிக் கொள்பவர் ஆவார்.

ஆக இது நாம் அச்சப்பட வேண்டிய இடமாகும். நாம் நமது ஒவ்வொரு செயலையும் ஒவ்வொரு அடியையும் மிகவும் கவனத்துடன் செய்ய வேண்டிய எடுத்துரைக்க வேண்டிய அவசியம் உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகையின் நோக்கம் நம் மீது திருக்குர்ஆனின் ஆட்சியை நிலைபெறச் செய்வதாகும். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முன்மாதிரி மற்றும் சுன்னத்தின்படி நம்மை செயல்பட வைப்பதாகும் என நான் கடந்த குத்பாவில் எடுத்துரைத்தேன். இந்த நோக்கத்தை அடைவதற்காக அன்னார் நமக்கு மீண்டும் மீண்டும் கவனமூட்டியிருக்கிறார்கள். நாம் நேர்மையுடன் நம்மை ஆராய்ந்து பார்த்தால், நான் ஏற்கனவே கூறியது போன்று நமது செயல் சீர்திருத்தம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய இந்த விசயங்களைக் கேட்டு சில நாட்களுக்கு மட்டும் ஏற்படுகிறது. பிறகு மீண்டும் பழைய நிலைக்கு நம்மில் பெரும்பாலார் திரும்பி விட ஆரம்பித்து விடுகின்றனர்.

ஆக, நான் கடந்த குத்பாவில் கூறியது போன்று, நமது நிலைமை அந்த பொம்மையைப் போன்றதாகும். அந்த பொம்மையின் மீது மூடியின் தாக்கம் இருக்கும் வரை மூடியிருக்கிறது. பிறகு மூடி திறந்தவுடன் ஸ்பிரிங்கின் மூலம் குதித்தவாறு வெளியே வருகிறது. இதனைப் போன்று ஒரு தலைப்பின் கீழ் தொடர்ந்து அறிவுரை வழங்கப்படும் போது பெரும்பாலான மக்கள் மீது அதன் தாக்கம் ஏற்படுகிறது. மேலும் இந்த அறிவுரை கூறுவது, அழுத்தம் கொடுப்பது குறையும் போது பிறகு நஃப்ஸின் ஸ்பிரிங் அல்லது தீமைகளின் ஸ்பிரிங் குதித்தவாறு ஏதாவது ஒரு தீமையை வெளிப்படுத்துகிறது. பல தூய மக்கள் கடந்த குத்பாவிற்குப் பிறகு எனக்கு, நாங்கள் முயற்சியும் செய்கின்றோம். துஆவும் செய்கின்றோம். தாங்களும் துஆ செய்யுங்கள் என எழுதியுள்ளனர். இந்த குத்பாவின் காரணமாக பெட்டியில் அடைபட்டுள்ள பல்வேறு தீமைகள், பொம்மைகள் அடைபட்டே இருக்கட்டுமாக! நீண்ட காலம் வரை அது வெளியில் வராமல் இருக்கட்டுமாக! என எழுதியுள்ளனர்.

ஆக, இந்த வகையில் இந்த ஜேக், இந்த பொம்மை மீண்டும் மீண்டும் பெட்டியிலிருந்து வெளியே வர ஏன் முயற்சிக்கிறது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். ஒரு விசயத்தில் சீர்திருத்தம் ஏற்படும் என்றால், சீர்திருந்த வேண்டிய பல்வேறு வழிமுறைகள் எப்போது கையாளப்படும் என்றால் அந்த விசயத்தின் குறைபாட்டின் காரணம் தெரிய வரும்போது தான் அது நடைபெறும். அதன் மூலம் தான் அந்த காரணங்களை ஒழிப்பதற்கு முயற்சி செய்யப்படும். காரணம் நிலைபெற்றுக் கொண்டே இருந்தால், தற்காலிக சீர்திருத்தத்திற்குப் பிறகு மீண்டும் தீமை மேலோங்கும். தீமை திரும்பி வந்து விடும். நான் இந்த கோணத்தில் சிந்தித்த போது, மேலும் படித்த போது, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது வழிகாட்டல் எனக்கு கிடைத்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய எழுத்து மற்றும் உரைநடையின் சிறப்பம்சம் என்னவென்றால், கருத்திலிருந்து தோன்றக்கூடிய கேள்விகளைத் தானே உருவாக்கி, உதாரணங்கள் மூலம் அதனைப் புரிய வைப்பார்கள். அன்னார் திருக்குர்ஆன், ஹதீஸ் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வார்த்தைகளின் ஒளியில் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதைப் போன்று வேறெங்கும் பார்க்க முடியாது. இந்த வகையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது குத்பாவிலிருந்து பலனடைந்தவாறு அதன் ஒளியிலிருந்து இவைகளை உங்கள் முன் எடுத்துரைக்கின்றேன்.

செயல்களைச் சீர்திருத்துவதற்குத் தடையாக நிற்கக்கூடிய அல்லது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவற்றில் முதல் விசயம், மக்கள் பாவங்களில் சில சிறிய பாவங்கள் என்றும், சில பெரிய பாவங்கள் என்றும் கருதுவதாகும். அதாவது மக்கள் சுயமாகவோ அல்லது ஆலிம்களின் கூற்றின் தாக்கத்தின் காரணமாகவோ சில பாவங்கள் சிறியது என்றும், சில பாவங்கள் பெரியது என்றும் தீர்மானித்துள்ளனர். இந்த விசயம் தான் செயல் சீர்திருத்தத்தில் தடையாக இருப்பதாகும். இதன் மூலம் மனிதனுக்கு தீமை செய்வதற்கு தைரியம் பிறக்கிறது. இதன் மூலம் தீமை மற்றும் பாவத்திலிருந்து தவிர்ந்திருப்பதன் முக்கியத்துவம் நிலைபெறுவதில்லை. இதன்படி சிறிய பாவங்கள் செய்தால் பிரச்சனை ஒன்றும் இல்லை அல்லது இதற்கு பெரிய தண்டனை ஒன்றும் கிடையாது எனக் கருதுகின்றனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஒருவர் நோய்வாய்ப்பட்டால் அந்த நோய் சிறிதாக இருந்தாலும் சரி, பெரிதாக இருந்தாலும் சரி அந்த நோய்க்கு மருந்து கொடுக்கப்படவில்லை என்றால் மருத்துவத்திற்காக கஷ்டப்படவில்லை என்றால் நோயாளி குணம் அடையமாட்டார். ஒரு சிறிய கரும்புள்ளி முகத்தில் தோன்றினால் மிகவும் கவலைக்குள்ளாகி விடுகிறது. இது சிறிது சிறிதாக வளர்ந்து முழு முகத்தையும் கருப்பாகி விடக்கூடாதே என்ற கவலையை ஏற்படுத்துகிறது. இதைப் போன்றே பாவத்திற்கான ஒரு கரும்புள்ளியாக உள்ளத்தில் இருக்கிற சஹாயிர் – சிறிய பாவங்களை அலட்சியப்படுத்துவதன் மூலம் கபாயீர் – பெரிய பாவங்களாக அவை ஆகி விடுகின்றன. சஹாயிர் அதாவது சிறிய கரும்புள்ளி இறுதியில் பெரிதாகி முழு முகத்தையும் கருமையாக்கி விடுகின்றது.

ஆக இந்த விசயத்தை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். மனிதன் எந்த பாவத்தையும் சிறிதாகக் கருதக் கூடாது. இது ஒரு சாதாரண பாவம் என்ற சிந்தனை ஏற்பட்டு விட்டால், பிறகு நோயின் விதை அழியாமலேயே இருக்கும். மேலும் நிலைமைக்கேற்ப இந்த சிறிய பாவங்களும் பெரிய பாவங்களாக ஆகி விடுகின்றன. இந்த வகையில் நாம் அனைவரும் நம்மை ஆராய வேண்டும். அல்லாஹ் ஒவ்வொரு சிறிய பாவங்களுக்கும், பெரிய பாவங்களுக்கும் கேள்வி கணக்கும், தண்டனையும் வைத்துள்ளான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சிறிய, பெரிய பாவங்களைப் பற்றி நன்மைகளைப் பற்றி என்ன விளக்கம் கூறியுள்ளார்கள் என அன்னாரது வாழ்வைப் பார்த்தோம் என்றால், அன்னார் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு மக்களுக்கும் பல்வேறு கருத்துக்களைக் கூறியுள்ளார்கள்.

ஒருவர் அன்னாரிடம் **பெரிய நன்மை எது?** எனக் கேட்ட போது, அவரிடம் **தாய், தந்தையருக்கு சேவை செய்வது** மிகப்பெரிய நன்மை ஆகும் எனக் கூறினார்கள். ஒரு நபர் அன்னாரிடம் பெரிய நன்மை எது? எனக் கேட்ட போது, அவரிடம், உமக்கு **தஹஜ்ஜுத் தொழுவது** என்பது மிகப்பெரிய நன்மையாகும் எனக் கூறினார்கள். வேறொருவர் அன்னாரிடம் பெரிய நன்மை எது? எனக் கேட்ட போது அன்னார் அவரிடம், நீர் **ஜிஹாதில் பங்கு பெறுவது** தான் உமக்கு மிகப்பெரிய நன்மையாகும் எனக் கூறினார்கள். எனவே இதிலிருந்து பெரிய நன்மை என்பது பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறுபட்ட மக்களுக்கு பலவாகும் என நிரூபணமாகிறது.

ஜிஹாது செய்வதன் நன்மை தொடர்பாக நான் இதனையும் எடுத்துரைக்கின்றேன். அதாவது நாம், ஜிஹாது செய்யமாட்டோம் என நம்மீது ஆட்சேபனை செய்யப்படுகிறது. இஸ்லாத்தின் மீது நாலாபுறத்தில் இருந்தும் வாளினால் தாக்கப்பட்ட அந்தக் காலத்தில் வாளைக் கொண்டு ஜிஹாது செய்வது தான் மிகப்பெரிய நன்மையாகும். அதில் தகுந்த

காரணமின்றி கலந்து கொள்ளாத மக்களை அல்லாஹ் தண்டனைக்கு உரியவர்கள் எனக் கூறியுள்ளான். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், **வாக்களிக்கப்பட்ட மஸீஹ் போரை நிறுத்துவார்** எனக் கூறியுள்ளார்கள். ஏனென்றால், இஸ்லாமிய மார்க்கத்தின் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களின் கோணம் மாறி விடும். இஸ்லாம், மார்க்கம் என்ற ரீதியில் வாளினால் தாக்கப்படமாட்டாது. மாறாக பிரசுரங்கள், அச்சகங்கள், ஊடகங்கள் மேலும் இதுபோன்ற ஆயுதங்களைக் கொண்டு இஸ்லாத்தின் மீது தாக்குதல் நடத்தப்படும். இதனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் அவரது ஜமாஅத்தும் எதிரிகள் தாக்குதலுக்காக பயன்படுத்திய அதே ஆயுதங்களையே பயன்படுத்துவார்கள். இந்த விசயத்தை கண்முன் நிறுத்தியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது ஒரு கவிதை வரியில், *தற்போது மார்க்கத்திற்காக போரிடுவது தடுக்கப்பட்டிருக்கிறது* எனக் கூறியுள்ளார்கள்.

எனவே ஒரு காலத்தில் வாளினால் போரிடுவது நன்மை எனக் கூறியதற்குக் காரணம் அந்தக் காலத்தில் இஸ்லாம் வாளின் தாக்குதல் மூலம் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. மேலும் அதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதனால் வாளினால் ஜிஹாது செய்வது நன்மையாகவும், அவசியமாகவும் கருதப்பட்டது. ஆனால் தற்போது அது நன்மையாக இல்லை. மாறாக தடுக்கப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் எதிரிகள் இஸ்லாத்திற்கு எதிராக வாளை ஏந்தாதவரை அது ஹராமாக்கப்பட்டு விட்டது. எனவே **தற்போது நன்மையான அனுமதிக்கப்பட்ட ஜிஹாது திருக்குர்ஆனின் போதனைகளைப் பரப்பக்கூடிய ஜிஹாது ஆகும். அறிவிற்கான ஜிஹாது ஆகும். அச்சகம், மீடியா, நூல்கள் மூலமாக இஸ்லாத்தின் அழகிய போதனைகளைப் பரப்ப வேண்டிய ஜிஹாது ஆகும்.**

ஒருவர் தனது குறைவான அறிவின் காரணமாகவோ அல்லது வேறு ஏதாவது காரணமாகவோ நேரடியாக இந்த ஜிஹாதில் பங்குபெற முடியவில்லை என்றால் அவருக்கு நூல்களைப் பரப்புவதற்காக, தப்லீக் பணிகளுக்காக **பொருள் தியாகம் என்ற ஜிஹாது** இருக்கின்றது. இந்த ஜிஹாது செய்பவர் தனது மனைவி மக்களுக்குரிய உரிமைகளைச் செலுத்துபவராக இல்லையென்றால், அவர்களை கவனிக்கவில்லை என்றால் அவர்களுக்கு மிகப்பெரிய நன்மை இந்த ஜிஹாது செய்வதல்ல. மாறாக பெரிய நன்மை அவர் மீது கடமையாக்கப்பட்ட மனைவி மக்களின் உரிமைகளை நிறைவேற்றுவதேயாகும். மனைவி மக்களை அவர்களது உரிமைகளிலிருந்து விலக்குவது, அவர்களது கல்வியின் பக்கம் கவனம் செலுத்தாமல் இருப்பது, அதிலிருந்து விலக்குவது என்பது இப்படிப்பட்ட மக்களை இது குற்றம் புரிந்தவனாக ஆக்கி விடுகிறது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய காலத்தில் ஜிஹாதின் கடமை இருந்தும் கூட நான் ஏற்கனவே கூறியது போன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், தாய் தந்தையருக்கு சேவை செய்வதை மிகப்பெரிய நன்மையாக கூறி இருக்கின்றார்கள். எனவே ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும், நிலைமைக்கும் ஏற்ப பெரிய நன்மை என்பது வெவ்வேறானதாக இருக்கின்றது. இதைப் போன்று தவறான வகையில் பணத்தை செலவழிப்பது ஒரு தீமையாக இருப்பதை நாம் பார்க்கின்றோம். இது தடைசெய்யப்பட்ட ஒன்றாகும்.

இன்றைய காலத்தில் சூதாட்ட இயந்திரங்கள் உள்ளன. பல்வேறு வகையில் சுதாட்டங்கள் நடைபெறுகின்றன. பலர் லாட்டரி சீட்டு வாங்குவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். சூதாட்ட இயந்திரத்திற்குச் செல்கின்றனர். பொதுவாகவும் சூதாடுகின்றனர். ஆனால் அவர்கள் தமது வாழ்வில் மக்களிடம் பொய் பேசுவதில்லை. அநீதியிழைப்பதில்லை. கொலை செய்வதில்லை. இப்படிப்பட்ட மக்கள் இந்த தீமைகளைப் பெரிய தீமைகளாகக் கருதுகின்றனர். ஆனால் சூதாடுவது, தவறான காரியத்தில் பணத்தை செலவழிப்பதை – வீணாக்குவதை இவர்கள் தீமையாகக் கருதுவதில்லை. இப்படிப்பட்ட நபருக்கு தவறான வழியில் பணம் செலவழிப்பது மிகப்பெரிய பாவம் ஆகும். மேலும் ஏனைய பாவங்களை இவர்கள் பாவங்களாகவே கருதுகின்றனர்.

அடுத்து நாம் பார்க்கின்றோம். ஒரு பெண் தனது ஆடையை ஒழுக்கம் நிறைந்ததாக அணிவதில்லை. வெளியில் செல்லும் போது பர்தா அணிவதைக் கவனத்தில் கொள்வதில்லை. தலையை மூடாமல் அஹ்மதி முஸ்லிமாக ஆன பிறகு பர்தா இல்லாமல், ஸ்கார்ப் இல்லாமல், துப்பட்டா இல்லாமல் செல்கின்றார். ஆடை மிகவும் இருக்கமாக உடலின் அங்கங்களை வெளிக்காட்டக்கூடியதாக அணிகின்றார். ஆனால் அவளிடம் பொருள்தியாகம் செய்யும்படி கூறினால், ஏதாவது சேவைக்காக சந்தா வழங்கும்படி கூறினால் உள்ளம் திறந்து கொடுக்கின்றாள் அல்லது அவளுக்கு பொய் மீது வெறுப்பு இருக்கின்றது. யாராவது அவள் முன்பாக பொய் கூறினால் அவளால் அதனை சகித்துக் கொள்ள முடியாது. இவர்களுக்கு மிகப்பெரிய நன்மை என்பது சந்தாவில் முன்னேறுவதோ பொய்யை வெறுப்பதோ கிடையாது. மாறாக

இவர்களுக்கு பெரிய நன்மை என்பது திருக்குர்ஆனின் கட்டளையாகிய தனது ஆடையை ஒழுக்கம் நிறைந்ததாக ஆக்குங்கள். பர்தாவைப் பேணுங்கள் என்பதன்படி அமல் செய்வதாகும்.

எதனை சிறிய நன்மை எனக் கருதி கவனம் செலுத்துவ -தில்லையோ அதுவே ஒரு காலத்தில் அவளை தீமையின் பக்கம் தள்ளி விடும். எனவே நன்மை, தீமையின் தரம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நபருடைய நிலையைப் பொருத்தே இருக்கின்றது. பல்வேறு நிலைகளில் பல்வேறு மக்களின் செயல்கள் நன்மை மற்றும் தீமையின் நிலைகளை மாற்றி விடுகின்றது. எனவே அந்த தீமை பெரியது, இந்த தீமை சிறியது என்றும், அந்த நன்மை பெரியது, இந்த நன்மை சிறியது என்றும் நினைக்கும் வரை மனிதனால் எந்த தீமையிலிருந்தும் தவிர்ந்திருக்க முடியாது. எந்த விதமான நன்மைகளைச் செய்யவும் வாய்ப்பு கிடைக்காது. நமது கண்முன் எப்போதும் இந்த விசயங்கள் இருக்க வேண்டும். அதாவது எந்த செயலை விடுவதற்கு மனிதனுக்கு ஆற்றல் இல்லையோ அது மிகப்பெரிய தீமை ஆகும். அதை விடுவது மிகவும் கஷ்டமாக இருக்கும். அது மனிதனின் வழக்கத்தில் இணைந்திருப்பதாக இருக்கும். எதனை செய்வது மனிதனுக்கு கடினமாக இருக்குமோ அதுவே மிகப்பெரிய நன்மையாகும். அதாவது பல்வேறு தீமைகள் ஒருவருக்கு பெரியதாகவும், மற்றவருக்கு சிறியதாகவும் இருக்கின்றன. அதைப் போன்று பல்வேறு நன்மைகள், ஒருவருக்கு பெரிய நன்மையாகவும் மற்றவருக்கு சிறிய நன்மையாகவும் இருக்கின்றன.

எனவே நாம் நமது செயல் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்றால், முதலாவதாக, அதாவது விபச்சாரம் ஒரு பெரிய பாவமாகும். கொலை செய்வது ஒரு பெரிய பாவமாகும். திருடுவது ஒரு பெரிய பாவமாகும். புறம் பேசுவது ஒரு பெரிய பாவமாகும். மேலும் இதைத் தவிர மற்ற அனைத்தும் சிறிய பாவங்களாகும் எனக் கருதுவதை உள்ளத்திலிருந்து அகற்றுவது அவசியமானதாகும். அதைப் போன்று இந்த விசயத்தையும் உள்ளத்தில் இருந்து அகற்ற வேண்டும். அதாவது நோன்பு வைப்பது ஒரு பெரிய நன்மை ஆகும். ஸக்காத் கொடுப்பது ஒரு பெரிய நன்மை ஆகும். இதைத் தவிர மற்ற அனைத்து நன்மைகளும் சிறிய நன்மைகளாகும் என பொதுவான முஸ்லிம்கள் கருதுவதைப் போல கருதுவதை உள்ளத்திலிருந்து அகற்ற வேண்டும். இந்த சிந்தனைகளை உள்ளத்திலிருந்து அகற்றவில்லை என்றால், பிறகு நமது செயல் பலவீனமானதாக இருக்கும். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்தக் கூற்றை, அதாவது திருக்குர்ஆனில் 700 கட்டளைகளின்படி செயல்படாதவர் இரட்சிப்பின் கதவை தனது கைகளினாலேயே மூடிக் கொள்பவர் ஆவார் என்பதை கண்முன் வைக்கும் போது தான் செயலில் உறுதி ஏற்படும்.

எனவே நாம் மற்றவர்களைப் போல சில நன்மைகள் சிறியது என்றும், சில நன்மைகள் பெரியது என்றும் கருதக்கூடாது. இந்த விசயத்தில் ஏனைய முஸ்லிம்கள் எந்த நிலையில் உள்ளனர் என்றால், நோன்பு வைப்பது மிகப்பெரிய நன்மையாகும் என அவர்கள் கருதுகின்றனர். ஆனால் ஜமாஅத்தாக தொழுவதற்கு அவர்களிடம் எந்த முக்கியத்துவமும் இல்லை. ஆனால் நோன்பு மிகவும் முக்கியமானதாகும். மிகவும் கவனமாக இதனை கடைபிடிப்பார்கள். எவர் மீது ஸக்காத் கொடுப்பது கடமையாக உள்ளதோ அவர் ஸக்காத்தை மிச்சப்படுத்த முயற்சி செய்வார். ஆனால் அவர் கண்டிப்பாக நோன்பு நோற்பார். ஏனென்றால் அவர் நோன்பு வைக்கவில்லை என்றால் அது அவருடைய பார்வையில் மாபெரும் குற்றம் ஆகும். ஸக்காத் தொகையை மிச்சப்படுத்த ஒரு காலத்தில் பாகிஸ்தானில் இந்த நிலைமை இவ்வாறிருந்தது. இப்போது என்ன நிலைமை எனத் தெரியவில்லை.

அதாவது 1974-ல் அஹ்மதிகள் சட்டத்தின் அடிப்படையில் முஸ்லிம் அல்லாதவர்களாக அறிவிக்கப்பட்டனர். பாகிஸ்தான் அரசு வருடத்தின் கடைசியில் ஸக்காத் கடமை ஆனவர்களுக்கு அவர்களது வங்கி கணக்கிலிருந்து நேரடியாக ஸக்காத் தொகையை பலவந்தமாக எடுத்துக் கொள்ளும். ஆனால் அஹ்மதிகள் முஸ்லிம் அல்லாதவர்கள் என அறிவிக்கப்பட்டதால் அவர்களிடம் ஸக்காத் வசூலிப்பது கடமையாக இருக்கவில்லை. இதன்படி வங்கியில் கணக்கு வைத்துள்ள அஹ்மதி அல்லாதவர்கள் ஸக்காத் தொகையை மிச்சப்படுத்த வங்கிப் படிவத்தில் தன்னை காதியானி அஹ்மதி என எழுதி வந்தனர். இதுதான் இவர்களது ஈமானின் நிலையாகும். இவர்களது பார்வையில் அஹ்மதிகள் காஃபிர் ஆவார்கள். ஆனால் காசை மிச்சப்படுத்துவதற்கான நேரம் வந்தவுடன் தன்னை இந்த காஃபிர்களுடன் இணைத்துக் கொண்டனர். இன்றைய நாட்களில் நிலைமை எவ்வாறு உள்ளது என்பது தெரியவில்லை. ஆனால் ஒரு காலகட்டத்தில் அவ்வாறுதான் இருந்தது. இந்த நிலையில் நன்மை மற்றும் தீமையின் தரங்களை நிர்ணயிப்பதற்கு இறைவன் பக்கமும் இவர்கள் பார்ப்பதில்லை. அவனது ரஸுலின் பக்கமும் பார்ப்பதில்லை. மாறாக பெயர் தாங்கிய மார்க்க சட்ட வல்லுனர்கள், முஃப்திகள், ஆலிம்களின் பின்னால் செல்கின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு சம்பவத்தை **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்:**

ஒருமுறை ரமலான் மாதத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அமிர்தசரஸ் பயணம் மேற்கொண்டிருந்தார்கள். அப்போது சொற்பொழிவாற்றுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. அன்னார் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும் வேளையில் அன்னாரது தொண்டை காய்ந்து போனது. இதனைக் கண்ட ஒரு நண்பர் தேநீர் குவளையை அன்னாருக்கு கொடுத்தார். அன்னார் அதனை தடுத்தார்கள். சிறிது நேரத்திற்குப் பிகு மீண்டும் அதே போன்று கஷ்டம் ஏற்பட்டது. மீண்டும் அந்த நபர் கவலையுடன் அந்த தேநீர் குவளையைக் கொடுத்தார். அன்னார் அதனை தடுத்தார்கள். தனது கைகளினால் வேண்டாம் என சைகையும் காட்டினார்கள். ஆனால் மீண்டும் தொண்டை காய்ந்து போனது. பிறகு மூன்றாவது முறையாக அந்த நபர் தேநீர் குவளையை அன்னாருக்கு கொடுத்தார். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், நான் இதனை வாங்கவில்லை என்றால் நான் காட்டுவதற்காக அவ்வாறு செய்கின்றேன் என்றும், பயணத்தில் நோன்பு வைக்க வேண்டாம் என்ற சலுகை இருந்தும் மக்களுக்கு காட்டுவதற்காக அதனை கடைபிடிக்கவில்லை என்றும் மக்கள் கருதி விடக் கூடாது என்பதற்காக அவரிடமிருந்து அதனை வாங்கிக் குடித்தார்கள். அதனைக் கண்ட ஜமாஅத் அல்லாதவர்கள், பாருங்கள்! இவர் தன்னை மஹ்தி என்று வாதம் புரிகின்றார். ஆனால் ரமலான் மாதத்தில் நோன்பு கூட வைக்கவில்லை எனக் கூச்சலிட்டனர்.

அந்த மக்களின் பார்வையில் இறைவனுடைய கட்டளைக்கு எதிராக இருப்பினும், நேன்பை கடைபிடிக்க வேண்டும் என்பது முக்கியம் வாய்ந்ததாகும்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இவர்களில் 90% பேர் தொழாதவர்கள் ஆவர். தொழுகையைக் கடைபிடிக்காதவர்கள் ஆவர். 99% பேர் பொய் கூறுபவர்கள், ஏமாற்றுபவர்கள், கொள்ளையடிப்பவர்கள் ஆவர். ஆனால் அவர்களில் நிச்சயமாக 99% பேர் நோன்பாளியாக இருந்திருப்பார்கள் என்பதும் உண்மையாகும். ஏனென்றால் அவர்களது பார்வையில் நோன்பு மிகப்பெரிய நன்மையாகக் கருதப்படுகின்றது. ஆனால் அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதைப் போன்று நோன்பு நோற்பதில்லை. பொய் கூறுபவர்கள், புறம் பேசுபவர்கள், தீய வார்த்தை பேசுபவர்கள் போன்றவர்களது நோன்பு இறைவனது பார்வையில் நோன்பாக கருதப்படாது. அவர்கள் வெறும் பசியும், தாகமும் ஆக இருப்பவர்கள் ஆவர்.

நாம் ஆராய்ந்து பார்த்தால் முஸ்லிம்களின் பெரும்பான்மை –யினரின் நிலை இந்த தரத்தின்படி பசியும் தாகமுமாக இருப்பதாகும். இவ்வாறு பசியும் தாகமுமாக இருப்பது அவர்களது பார்வையில் மிகப்பெரிய நன்மையாகும். அவர்களது கடமையை நிறைவேற்றுவதற்கு இது போதுமானதாகும். அல்லது அவர்களது பார்வையில் பெரிய நன்மைகளாக இருக்கின்ற மேலும் சில நன்மகளை இதனுடன் இணைத்துக் கொள்வார்கள். மேலும் இதனையே தனது பாவமன்னிப்பிற்குப் போதுமானதாகக் கருதுவார்கள். இப்படிப்பட்ட மக்கள் உலகில் நன்மையை நிலைபெறச் செய்பவர்களாகத் திகழவும் மாட்டார்கள். தீமையின் தரத்தை நிலை நிறுத்தவுமாட்டார்கள். அவர்கள் சுயமாகவே பெரிய நன்மைகள், சிறிய நன்மைகள் மற்றும் பெரிய தீமைகள், சிறிய தீமைகள் ஆகியவற்றின் தரத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். இறுதியில் இவர்களது பார்வையில் பெரிய நன்மையாக உள்ளவைகளைக் கடைபிடிப்பார்கள். மேலும் எந்த தீமையை சிறியதாக கருதுவார்களோ அதனை எதிர்க்கத் தயாராகவும் இருப்பதில்லை. அந்த தீமையை விடாமல் இருப்பது என்பது, அதற்கெதிராக போட்டியிட முடியவில்லை என்பதாகும். இவ்வாறு ஒரு தீமையிலிருந்து மற்றொரு தீமையினுள் தள்ளப்பட்டுக் கொண்டே செல்வார்கள்.

ஆனால் இஸ்லாம் எதனை செய்வது கடினமானதாக இருக்கிறதோ அதனை நன்மை எனக் கூறுகிறது. அது ஒவ்வொருவருக்கும் வேறுபட்டதாகும். மேலும் எந்த தீமையிலிருந்து விலகியிருப்பது கடினமோ அதனை பெரிய நன்மையாகக் கூறுகிறது. எனவே நாம் நம்மை சீர்திருத்த வேண்டும் என்றால், இதனை எப்போதும் கண்முன் நிறுத்த வேண்டும். அதாவது ஒவ்வொரு நன்மையைச் செய்வதற்கும் ஒவ்வொரு தீமையிலிருந்து தவிர்ந்திருப்பதற்கும் முயற்சி செய்ய வேண்டும். நாம் ஏற்படுத்தியுள்ள தரங்கள் நம்மை நன்மையில் முன்னேறக் கூடியவர்களாக தீமையிலிருந்து விலகி இருக்கக்கூடியவர்களாக ஆக்காது.

சில சமயங்களில் மனிதன் இவ்வாறு சுயமாக விளக்கங்களைக் கொடுத்து, சில தீமைகளை விட வேண்டும். சில தீமைகளை விடக்கூடாது என்றும் சில நன்மைகளைச் செய்ய வேண்டும். சில நன்மைகளைச் செய்ய வேண்டாம் என்றும் கருதி தன்னை இழப்பிற்கு ஆளாக்கிக் கொள்கின்றான். சிறிதாக தென்படக்கூடிய நன்மைகள், கவனக்குறைவின்

காரணமாக நன்மைகள் செய்வதிலிருந்தே விலக்கி விடுகின்றது. மேலும் பெரும்பாலும் சாதாரணமாக தென்படக்கூடிய தீமைகள், சரிசெய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தி ஆன்மீகத்தை அழித்து விடுகின்றது. மேலும் இறைவன் புறமிருந்து கிடைக்கக்கூடிய தூய்மை, பரிசுத்தம் என்ற அருளிலிருந்த தடுக்கப்பட்டவராகி விடுகின்றார். சில தீமைகளைச் சிறியதாகக் கருதுவதன் காரணமாக, தீமையின் விதை நிலைபெற்றிருக்கும். அது சந்தர்ப்ப சூழ்நிலையை எதிர்பார்த்துக் காத்திருக்கும். சந்தர்ப்பம் கிடைத்ததும் அது வெளியே வந்து விடும். ஆக மிகவும் கவனத்துடன் செயல்படுவது அவசியமானதாகும்.

தீமையை அழிப்பது என்பது அனைவரும் இணைந்து முழுமையாக முயற்சி செய்யும் போது தான் நடைபெறும். ஒரு சமூகமாக ஒரு ஜமாஅத்தாக முயற்சி செய்ய வேண்டும். ஜமாஅத்தில் இருக்கும் ஒவ்வொரு நபரும் முயற்சி செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் தனது சுய விளக்கத்திற்கேற்ப நன்மை தீமைகளைச் செய்தால், பிறகு ஒருவர் ஒரு விசயத்தை பெரிய தீமை எனக் கருதுவார். மற்றவர் அதனை சிறிய தீமை எனக் கருதுவார். மூன்றாமவர் இவர்கள் இருவரை விட வேறொரு சிந்தனை கொண்டவராக இருந்தால் பிறகு சமூகத்திலிருந்த தீமை ஒழியாது. தீமைகள், அனைவருடைய சிந்தனையும் ஒரே கோணத்தில் இருக்கும் போதுதான் ஒழியும்.

உதாரணமாக, முஸ்லிம்களில் பெரும்பாலார் பன்றி இறைச்சி உண்பதை மோசமானதாகவும், இணை வைப்பதை விடவும் மோசமானதாக கருதுகின்றனர். தீயவன், திருடம், விபச்சாரம் செய்பவன், கொள்ளை அடிப்பவன் போன்றோர் தமது வேலையைச் செய்த பின்னரும் அவர் தம்மை முஸ்லிம் என்றே கூறுவார். ஆனால் அவர்களிடம் பன்றி இறைச்சியைச் சாப்பிடுங்கள் என்றால் அவர் நான் முஸ்லிம் ஆவேன். என்னால் எவ்வாறு சாப்பிட முடியும் என்று கூறுவார். இதற்குக் காரணம் முஸ்லிம்களில் ஒட்டுமொத்தமாக பன்றி இறைச்சி சாப்பிடுவது பாவம் ஆகும். ஹராம் ஆகும் என்ற உணர்வு ஏற்பட்டிருப்பதேயாகும். இங்கு இந்த சூழலில் வாழ்ந்த பிறகும் கூட இங்குள்ள முஸ்லிம்களில் 99% அல்லது 100% பேர் பன்றி இறைச்சியை வெறுக்கின்றனர். இது முஸ்லிம்களில் ஒட்டுமொத்தமாக ஏற்படுத்தப்பட்டுள்ள உணர்வினாலேயே ஆகும்.

ஆக, தீமைகளைத் தடுப்பதற்கும், நன்மைகளை நிலை நாட்டுவதற்கும் சமூகத்திலுள்ள ஒவ்வொரு நபரையும் தூண்ட வேண்டியது அவசியமாகும். சாதாரண நன்மையும் கூட பெரிய நன்மை ஆகும். சாதாரண தீமையும் கூட பெரிய பாவம் ஆகும். நம்மில் ஒவ்வொருவரிடமும் இந்த உணர்வு ஏற்படாத வரை அதற்கான முயற்சி செய்யாத வரை சமூகத்தில் தீமைகள் நிலைபெற்றுதான் இருக்கும். மேலும் அவை செயல் சீர்திருத்தத்தில் தடைகளை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும்.

செயல் சீர்திருத்தத்திற்கு இரண்டாவது முக்கிய காரணியாக இருப்பது, சமூகம் மற்றும் காப்பி அடிக்கக்கூடிய, பின்பற்றக்கூடிய பண்பும் ஆகும். அல்லாஹ் மனித இயல்பில் பார்த்து அதன்படி செயல்படக்கூடிய பண்பை வைத்திருக்கின்றான். இது சிறு வயதிலிருந்தே ஆரம்பமாகி விடுகின்றது. இது இயல்பில் இருப்பதால் சிறு குழந்தைகளின் இயல்பிலும் இந்த பண்பு தென்படுகின்றது. இந்த பண்பு நிச்சயமாக நமது நன்மைக்காக வைக்கப்பட்டதாகும். ஆனால் இதனை தவறாக உபயோகிப்பது மனிதனை அழித்து விடுகிறது அல்லது அழிவின் பால் அழைத்துச் செல்கிறது. இந்த பார்த்துப் பின்பற்றக்கூடிய மற்றும் சமூகத்தின் தாக்கத்தினால் மனிதன் தனது தாய் தந்தையரிடமிருந்து மொழியைக் கற்கின்றான். மேலும் பல விசயங்களையும் கற்கின்றான். நல்லவைகளையும் கற்கின்றான். நல்லவைகளைக் கற்று பிள்ளைகள் உயர் நல்லொழுக்கம் கொண்ட பிள்ளைகளாகத் திகழ்கின்றனர். தாய் தந்தையர் நல்லவர்களாகவும், தொழுகையை முறைப்படி பேணுபவர்களாகவும், திருக்குர்ஆன் ஓதுபவர்களாகவும், பரஸ்பரம் அன்பு, நேசத்துடன் வாழ்பவர்களாகவும், பொய்யை வெறுப்பவர்களாகவும் இருந்தால் பிறகு பிள்ளைகளும் அவர்களின் தாக்கத்தினால் நன்மையை மேற்கொள்பவர் –களாகத் திகழ்வார்கள்.

ஆனால் பொய், சண்டை சச்சரவு, வீட்டில் ஒருவரையொருவர் பரிகாசம் செய்யும் விசயங்களில் ஜமாஅத்தின் கண்ணியத்தைக் கவனத்தில் கொள்ளாமல் இருப்பது போன்ற தீமைகளைப் பிள்ளைகள் பார்க்கும் போது அந்த பார்த்து பின்பற்றும் பண்பு மற்றும் சமூகத்தின் தாக்கத்தின் காரணமாக இந்த தீமைகளையே அவன் கற்கின்றான். வெளியில் செல்லும் போது அங்கு சுற்றுச்சூழலில் நண்பர்கள் மத்தியில் காண்பதைக் கற்க முயற்சி செய்கின்றான். இதனால் நான் மீண்டும் மீண்டும் பெற்றோர்களுக்கு கவனமூட்டுகின்றேன். அதாவது நீங்கள் உங்களது பிள்ளைகளின் வெளிச்சூழல் மீதும் கவனம் செலுத்துங்கள். வீட்டில் பிள்ளைகள் டி.வி. நிகழ்ச்சிகள் பார்க்கும் போதும், இணையதளம் உபயோகிக்கும் போதும் கவனம் செலுத்துங்கள். அடுத்து இந்த விசயத்தின் மீதும் கவனம் செலுத்துவது அவசியமாகும். அதாவது பிள்ளைகளுக்கு தர்பிய்யத் வழங்க வேண்டிய வயது மிகவும் சிறு பிள்ளைகளாக இருக்கும் போதே ஆரம்பித்து

விடுகின்றது. இதனை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். பிள்ளை பெரியவனாக ஆன பிறகு தர்பிய்யத் கொடுக்கலாம் என நினைக்காதீர்கள். 2, 3 வயது கூட பிள்ளைகளுக்கு தர்பிய்யத் வழங்க வேண்டிய வயதாகும்.

நான் கூறியது போன்று பிள்ளைகள் வீட்டில் தனது தாய் தந்தையரிடமிருந்து விசயங்களைப் பார்த்துப் பின்பற்றுகின்றனர். விசயங்களைக் கற்கின்றனர். தாய் தந்தையருக்கு தற்போது பிள்ளை சிறுவனாவான். அவனுக்கு என்ன தைரியம்? என ஒருபோதும் நினைக்கக் கூடாது. மாறாக அவனுக்கு எல்லா விசயமும் தெரியும். அவன் உங்களது ஒவ்வொரு அசைவையும் பார்க்கின்றான். புரியாமலேயே அந்த விசயங்களை அவனது மூளையில் பதிந்து வைக்கின்றான். பிறகு ஒரு காலகட்டத்தல் அதனைப் பின்பற்றத் தொடங்கி விடுகின்றனர். பெண் பிள்ளைகள் விளையாடும் போது தனது தாயைப் போன்று ஆடை அணிய முயற்சி செய்வார்கள். அவர்களைப் போன்றே செயல்பட முயற்சி செய்வார்கள். பையன்கள் தந்தையைப் போன்று செயல்பட முயற்சி செய்வார்கள். தாய், தந்தையரிடம் தென்படக்கூடிய நன்மைகளையும் தீமைகளையும் அவர்கள் காப்பி அடிப்பார்கள்.

உதாரணமாக, பிள்ளைகள் பெரியவர்களாகும் போது இது நன்மையான காரியங்களாகும்; இது தீமையான காரியங்களாகும் என அவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் போது, பொய் பேசுவது தீமையாகும்; வாக்குறுதியை நிறைவேற்றுவது நன்மையாகும் எனக் கூறப்படும் போது, தனது தாய் தந்தையரிடம் உண்மை பேசுவதற்கான உயர்ந்த நல்லொழுக்கத்தைப் பார்க்காத பிள்ளைகள், தனது தாய் தந்தையரிடம் வாக்குறுதி நிறைவேற்றுவதைப் பார்க்காத பிள்ளைகள் அவர்கள் கல்வி அறிவு என்ற ரீதியில் கண்டிப்பாக புரிந்து கொள்வார்கள். அதாவது பொய் பேசுவது தீமை என்றும், வாக்குறுதியை நிறைவேற்றுவது நன்மை என்றும் புரிந்து கொள்வார்கள். ஆனால் அவர்கள் அவ்வாறு செயல்படமாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் அவர்களது வீட்டில் இதற்கு எதிரான அமல்களையே பார்த்து வந்துள்ளனர். பிள்ளைகளின் பழக்கம் சிறு வயதிலிருந்தே உறுதியாக இருக்கும். எனவே அவர்கள் பெரியவர்களாக வளர்ந்த பிறகு இதனை ஏற்கமாட்டார்கள். பிள்ளைகள் தனது தாயை தொழுகையில் சேம்பேறியாக இருப்பதைக் கண்டால், தந்தை வீட்டிற்கு வந்த பிறகு தாயிடம் தொழுதீர்களா? எனக் கேட்டால், அதற்கு இன்னும் தொழவில்லை. தொழுது விடுவேன் எனப் பதில் கூறுகிறார் என்றால் பிள்ளையும் இதனைப் பார்த்து இது ஒரு நல்லதொரு பதிலாக இருக்கிறது. யாராவது என்னிடமும் தொழுது விட்டாயா? எனக் கேட்டால் அதற்கு இன்னும் தொழவில்லை. ஆனால் தொழுது விடுவேன் எனப் பதில் கூறுவேன் என்று நினைக்கின்றான். அல்லது தாயிடமிருந்து நான் மறந்து விட்டேன் அல்லது தொழுது விட்டேன் என்ற பதிலைக் கேட்டால் எந்த அளவுக்கு என்றால் நாள் முழுவதும் பிள்ளை தனது தாயுடன் தான் இருக்கிறது. அந்தப் பிள்ளைக்கு தனது தாய் தொழவில்லை என்பது தெரியும். பிறகு இந்த பதிலை பிள்ளைகள் தனது மூளையில் பதிய வைத்துக் கொள்கின்றனர். இதனைப் போன்று தந்தையின் தவறான கூற்றுகளும் பிள்ளைகளின் மூளையில் பதிந்து விடுகின்றன. தந்தை தவறான வகையில் கூறக்கூடிய ஒவ்வொரு விசயத்தையும் பிள்ளைகள் மூளையில் பதிய வைத்துக் கொள்கின்றன.

எனவே தாய் தந்தை இருவரும் பிள்ளைகளின் தர்பிய்யத்தில் தவறான வகையில் தர்பிய்யத் கொடுக்கின்றார்கள் என்றால், அவர்களுக்கு முன் தவறான அமல்களைச் செய்கின்றனர் என்றால் இது அவர்களை தவறான பாதையின் பால் அழைத்துச் செல்கின்றன. தனது செயலின் மூலம் தவறான போதனையை அவர்களுக்கு கற்றுக் கொடுக்கின்றனர் என்பதாகும். பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகும் போது இதனையே செய்கின்றனர். இதைப் போன்று அண்டை அயலார் மற்றும் தாய் தந்தையருடைய நண்பர்களின் தவறான செயல்களின் மூலமும் பிள்ளைகள் மீது தாக்கம் ஏற்படுகின்றது. எனவே உண்மையான செயல் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்றால், தனது சந்ததிகளிடம் தனது பிள்ளைகளிடம் செயல் சீர்திருத்தம் ஏற்பட விரும்பினால் இதன் மூலம் எதிர்காலத்தின் செயல் சீர்திருத்தத்தின் தரம் உயர விரும்பினால், பிறகு தாய் தந்தையர்கள் உங்களது நிலையின் மீது கவனம் செலுத்த வேண்டும். தனது நட்பையும் செயல் ரீதியில் சரியாக உள்ளவர்களிடம் மட்டுமே ஏற்படுத்த வேண்டும்.

ஆக, சிறு வயதிலேயே பார்த்துப் பின்பற்றக்கூடிய பழக்கம் இருக்கிறது. சுற்றுச்சூழலின் தாக்கமும் மூளையில் பதியக்கூடியதாக இருக்கிறது. பிள்ளைகள் நல்ல சுற்றுச்சூழலில் வளர்த்தீர்கள் என்றால், பிறகு அவர்கள் நன்மைகளைச் செய்து கொண்டே செல்வார்கள். தீய சூழலில் வளர்த்தீர்கள் என்றால், தீமைகளைச் செய்து கொண்டே செல்வார்கள். தீமையான காரியங்களைச் செய்பவர்கள் பெரியவர்களாக ஆகும் போது புரிய வைத்தால், இது தீய செயலாகும். இதை செய்யாதே! எனக் கூறினால் அப்போது அது அவர்களது கட்டுப்பாட்டில் இருந்து விலகிச் சென்றிருக்கும். இதன் பிறகு எங்களது பிள்ளைகள் வழிகெட்டுப் போய் விட்டனர் என்று தாய் தந்தையர் வருத்தம் அடையக் கூடாது.

ஆக, தாய் தந்தையரது மாபெரும் பொறுப்பு அவர்கள் தமது அமல்கள் மூலம் பிள்ளைகளை தொழுகையாளிகளாக ஆக்க வேண்டும். தமது அமல்களின் மூலம் பிள்ளைகளை உண்மையில் நிலைபெறச் செய்ய வேண்டும். தமது அமல்கள் மூலம் உயர் நல்லொழுக்கத்தை அவர்கள் முன் வெளிப்படுத்த வேண்டும். இதன் மூலம் அவர்களும் அதனை கடைபிடிக்க வேண்டும். பொய் சத்தியம் செய்வதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அதன் மூலம் பிள்ளைகளும் அந்த தீமையிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும். செயல் ரீதியில் சிறு வயதில் ஏற்பட்டுள்ள சிந்தனையில் எந்த அளவு தாக்கம் இருக்கும் என்றால், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு சஹாபியின் உதாரணத்தை எடுத்துரைத்துள்ளார்கள். அவர் சீக்கியர்களின் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆவார். பின்னர் அவர் அஹ்மதி ஆனார். அவர் மாட்டிறைச்சியைச் சாப்பிட மாட்டார். அவரது நண்பர்கள், அவரை மாட்டிறைச்சியை சாப்பிட வற்புறுத்தினர். நாங்கள் உம்மை மாட்டிறைச்சி சாப்பிட வைப்போம் என்றனர்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் ஒருமுறை விருந்தினர் அறையில் ஒரு மனிதர் அதிக வேகமாக நடந்து செல்கின்றார். அவருக்குப் பின்னால் அவரது நண்பர்கள் அவரைத் தொடர்ந்து செல்வதைப் பார்த்தேன். அப்போது அவரது நண்பர்கள் இன்று நாங்கள் உம்மை இறைச்சியைச் சாப்பிட வைப்போம் என்றனர். அதற்கு அவர் இறைவனுக்காக அவ்வாறு செய்யாதீர்கள் என்றார். கூறுகின்றார்கள்: ஒருமுறை இவருக்கோ அல்லது வேறொரு புதிய முஸ்லிமுக்கோ ஒருவர் சாப்பிட இறைச்சி கொடுத்த போது, அவருக்கு எந்த அளவு வெறுப்பு ஏற்பட்டதென்றால் அவருக்கு வாந்தி ஏற்பட்டது.

எனவே இது சிறு வயதிலிருநதே மாட்டிறைச்சியின் மீது வெறுப்பினை ஏற்படுத்தியதன் காரணத்தினாலேயாகும். பெரியவன் ஆன பிறகும், முஸ்லிம் ஆன பிறகும் அதன் மீது வெறுப்பு நிலைபெற்றிருக்கிறது. அவர் கொள்கையின் அடிப்படையில் தமது கொள்கையை மாற்றிக் கொண்டார். அஹ்மதிய்யா ஜமாஅத்தை ஏற்றுக் கொண்டார். ஆனால் செயல் முன்மாதிரியின் மூலம் அவரது தாய் தந்தையர் மாட்டிறைச்சியின் மீது வெறுப்பை ஏற்படுத்தி இருந்தனர். அது அவரை விட்டு விலகவே இல்லை.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

செயல் என்பது தென்படக் கூடியதாகும். எனவே மக்கள் அதனை காப்பி அடிக்கின்றனர். பிறகு இந்த விதை வளர்ந்து கொண்டே செல்கின்றது. ஆனால் கொள்கை என்பது கண்ணுக்கு புலப்படாத விசயமாகும். அதனால் அது தனது வட்டத்திற்குள் உட்பட்டிருக்கிறது. இதற்கான உதாரணம் கொள்கை என்பது பதியம் செய்து இணைக்கப்பட்ட மரத்தைப் போன்றதாகும். இரண்டு வெவ்வேறு மரத்தினை இணைப்பதன் மூலம் புதியதொரு கிளை வளரும். அதிலிருந்து புதுவிதமான கனி கிடைக்கும். அதனை சரியாக இணைத்தால் இவ்வாறு கனி கிடைக்கும். செயலின் உதாரணம் விதை விதைக்கப்பட்டு வளர்ந்த மரத்தைப் போன்றதாகும். அந்த விதை தானாகவே பூமியில் வேர்கள் விட்டு தட்பவெப்பத்திற்கேற்ப வளர ஆரம்பித்து விடும்.

எனவே தீய செயல்கள் பரவுவது என்பது மிகவும் எளிதானதாகும். மேலும் இந்த சுற்றுச்சூழலில் நம்மவர்களின் தீய நடத்தை மூலமும் தீமை பரவுகிறது. மற்றவர்களின் தீய நடத்தை மூலமும் பரவுகிறது. அவரது நன்மை மற்றும் தீமை பரவுவதில் சுற்றுச்சூழலின் தாக்கம் அதிக அளவு உள்ளது. ஆகையால் எப்போதும் இந்த விசயத்தை நாம் கண் முன் வைக்க வேண்டும். மேலும் சில விசயங்கள் இருக்கின்றன. வரக்கூடிய காலங்களில் அதனை எடுத்துரைப்பேன் இன்சா அல்லாஹ். அல்லாஹ் நமக்கு நமது செயல் சீர்திருத்தத்தின் பக்கமும் நமது பிள்ளைகளின் செயல் சீர்ததிருத்தத்தின் பக்கமும் எப்போதும் கவனம் செலுத்துவதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக!

இன்று ஒரு வருத்தமான செய்தி உள்ளது. நான் தொழுகைகளுக்குப் பிறகு ஒரு ஜனாஸா தொழுகையைத் தொழ வைப்பேன். இது சிரியாவைச் சேர்ந்த மர்ஹூம் காலித் அஹ்மது அல்பவராக்கி சாஹிப் உடையதாகும். காலித் பராக்கி சாஹிப் ஒரு இஞ்சினியர் ஆவார். இவரது வயது 37 ஆகும். இவரது பெற்றோருக்கு 1986 –ல் டமாஸ்கஸ் உடைய நாவாயி பகுதியில் ஹெஸரப் என்ற ஊரில் முதன்முதலாக பைஅத் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. பைஅத் செய்த பிறகு பகைமை மற்றும் மிரட்டலுடன் 1989 –ல் ஆறு மாதம் சிறைச்சாலை செல்ல வேண்டியதிருந்தது. தற்போது சிரியாவில் நடைபெற்ற பிரச்சனைகளினால் 2012 மற்றும் 2013–ல் இரண்டு முறை இவரது தந்தை கைது செய்யப்பட்டுள்ளார். காலித் பராக்கி சாஹிப் சகோதர சகோதரிகள் சிறு வயதிலிருந்தே அஹ்மதி ஆவார்கள்.

இவர் செப்டம்பர் 18ம் தேதி 2013-ல் மாலை வேளையில் அங்குள்ள இன்டலிஜென்ஸியின் ஏஜென்ஸியின் ஒரு பிராஞ்ச் சார்பாக கைது செய்யப்பட்டார். அதன் பிறகு இவரைப் பற்றி எந்த விதமான செய்தியும் கிடைக்கவில்லை. 2013 டிசம்பர் 9ம் தேதி இவரது தந்தையை மிலிட்டரி ஏஜென்ஸியின் ஒரு பிராஞ்ச் அழைத்தது. அங்கு அவரது மகனின் பேப்பர்ஸ் போன்றவற்றை ஒப்படைத்தது. இவர் 2013 அக்டோபர் 28ம் தேதி அன்று மரணமடைந்து விட்டார் எனக் கூறப்பட்டது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இவரது சடலம் இவரது தந்தையிடம் ஒப்படைக்கப்படவில்லை. ஒருவேளை அழைத்துச் செல்லப்பட்ட பிறகு அவருக்கு டார்ச்சர் கொடுக்கப்பட்டிருக்கலாம். அதன் காரணமாக அவர் இறந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. காலித் அல்வராக்கி சாஹிபின் நன்மை, இறையச்சம், நன்னடத்தை, மார்க்க போதனைகளைப் பின்பற்றுவது பற்றி அங்குள்ள பல அஹ்மதிகளும், அஹ்மதி அல்லாதவர்களும் சாட்சி பகர்ந்துள்ளனர். திருக்குர்ஆன் ஓதும் போது இவரது குரல் மிகவும் அழகானதாக இருக்கும். மிகவும் மென்மையான உள்ளம் கொண்ட, மக்களுடன் அனுதாபத்துடன் பழகக்கூடிய, ஒப்படைக்கப்பட்ட பணியை மிகவும் மகிழ்வுடன் செய்யக்கூடியவர் ஆவார். உதவி புரிதல், தூய்மை, ஜமாஅத் அமைப்பு மற்றும் கிலாஃபத்துடன் அன்பு ஆகியவை இவரது சிறப்பம்சமாக இருந்தது. தனது நாட்டுடன் அன்பு செலுத்தக்கூடியவரும் அனைத்து மக்களிடமும் அன்பு செலுத்தக்கூடியவரும் ஆவார்.

ஒரு உள்ளூர் ஜமாஅத்தின் தலைவராகவும் இருந்துள்ளார். தற்போது அவர் தஃலீமுல் குர்ஆன் வக்ஃபே ஆர்ஸி உடைய செயலராக தொண்டாற்றிக் கொண்டிருந்தார். இவர் வஸிய்யத் செய்தவர் ஆவார். சந்தாவை முறையாக வழங்கக்கூடியவர் ஆவார். இவரது மனைவியும் அஹ்மதி ஆவார். இவருக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். மகள் ஷுரூக், மகன் அஹ்மது இவர்கள் இருவரும் 6 வயதை விட சிறியவர்கள் ஆவர். இவர் கைது செய்யப்படுவதற்கு ஒரு சில வாரங்களுக்கு முன்பு ஹஸ்ஸாமுத்தீன் என்ற மகன் பிறந்துள்ளான். இந்த சிறுவன் வக்ஃபே நவ் திட்டத்தில் இருக்கின்றான்.

கைது செய்யப்படுவதற்கு முன்பு காலித் அல்பராக்கி சாஹிப் தனது ஃபேஸ் புக்கில், நாட்டுப்பற்று ஈமானின் பங்காகும் என்றும், எங்கள் இறைவா! எங்களது நாட்டை பாதுகாப்பாயாக! இதனை எல்லா விதமான பிரச்சனையிலிருந்தும் விடுவிப்பாயாக! இதனை முன்பை விட வலிமை வாய்ந்ததாகவும் அழகாகவும் ஆக்குவாயாக! இதன் குடிமக்களுக்கு உனது நெருக்கத்தை வழங்குவாயாக! இறைவா! இந்த நாட்டு மக்களின் உள்ளங்களை ஒன்றிணைப்பாயாக! பரஸ்பரம் அன்பு செலுத்தக் கூடியவர்களாக ஆக்குவாயாக! இறைவா! அமைதி, சாந்தி மற்றும் நன்மையைப் பரப்புவதற்கு இந்நாட்டின் நல்ல மனிதர்களுக்கு எப்போதும் உதவி புரிவாயாக! என எழுதியுள்ளார்.

அல்லாஹ் இந்த துஆவை இந்த நாட்டிற்காகவும் முஸ்லிம் உம்மத் அனைத்திற்காகவும் நிறைவேற்றுவானாக! இதன் மூலம் அங்குள்ள குழப்பங்கள் முடிவு பெற வேண்டும்.

தாஹிர் நதீம் சாஹிப் எழுதுகின்றார்கள்: கண்ணியத்திற்குரிய காலித் அல்பராக்கி சாஹிப் என்னுடன் இமெயில் மூலம் தொடர்பு கொண்டு வந்தார்கள். சிரியாவில் தங்கியிருந்த போது இவருடன் அறிமுகம் ஏற்பட்டது. அப்போது அந்த இளைஞர் சிறப்பான உபசரிப்பின் முன்மாதிரியாகத் திகழ்ந்தார். இவர் மிகவும் சாதாரணமான நல்ல சிரித்த முகம் கொண்ட மனிதர் ஆவார். டமாஸ்கஸ் ஜமாஅத்தின் ஒரு வீட்டில் வசித்து வந்தார். அது சென்டராக உபயோகிக்கப்பட்டு வந்தது. அவருக்கு அறிவுத் தேடலின் தாகம் எந்த அளவு இருந்தது என்றால், பெரும்பாலும் தனது ஒரு கஸினுடன் எங்களிடம் வருவார். அவருடன் அறிவுப்பூர்வமான விசயங்கள் மீது கருத்துப் பரிமாற்றம் நடைபெற்று வந்தது. ஜமாஅத்தின் ஏதாவதொரு நூல் அவருக்கு கிடைத்தால் மிகவும் துடிப்புடன் அதனைப் படித்து வருவார். ஜமாஅத்தின் பழைய நூலகத்திலிருந்து பழைய நூல்கள் மற்றும் பிரசுரங்கள் போன்றவற்றிலிருந்தும் அல் புஷ்ராவின் பழைய பதிப்புகளிலிருந்தும் கட்டுரைகளை எடுத்து அதனை கம்பியூட்டரில் மீண்டும் எழுதியுள்ளார். அதனை தனக்கும் அனுப்பியுள்ளதாக தாஹிர் சாஹிப் கூறுகின்றார். மொழியாக்கத்தில் ரிவியூ செக்ஸனில் உதவி புரிந்து வந்துள்ளார். தற்போது நூல்கள் பல மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வருகின்றன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது ஆழமான அன்பும், கிலாஃபத்துடன் அளவற்ற அன்பும் கொண்டிருந்தார். மஸீஹ் மவ்வூது தினம் தொடர்பாக வெளிவந்த அரபி நிகழ்ச்சிகளைக் கேட்டு மிகவும் உணர்வு பொங்க தனது வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு கஸீதாவை மிகவும் உணர்வு பொங்கும் குரலில் ரிக்கார்டு செய்துள்ளார். 2013 ஏப்ரல் 1 ஆம் தேதி எனக்கு அவர் ஒரு கடிதம் எழுதினார். அதன் இறுதியில் அவர் 2006 -ல் கண்ட தனது ரூஃயாவின் மூலம் அவர் தம் மீது மிகப்பெரிய பொறுப்பு உள்ளது என்றும்

மிகவும் முக்கியமான அமானத் அவரிடம் ஒப்படைக்கப்படும் என்றும் அவர் கருதினார். ரூஃயாவில், உண்மையில் நிலைத்திருக்கவும், எந்தவித பலவீனமும் ஏற்படக் கூடாது என வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்த ரூஃயாவிற்குப் பிறகு அவர் ஜமாஅத்தின் சதர் ஆக நியமிக்கப்பட்டார். அதன்படி அவர் அந்த ரூஃயா நிறைவேறி விட்டது எனக் கருதினார். ஆனால் ரூஃயாவில் உண்மையில் நிலைத்திருக்கவும் பலவீனம் காட்டாமல் உயிரை விடுவதற்கும் வலியுறுத்தப்பட்டிருந்தது. வெளிப்படையாகப் பார்க்கும் போது அவர் இந்த நிலைமையில் தான் தனது உயிரை அர்ப்பணித்திருக்கிறார் என்பது தெரிகிறது. அவர் மார்க்கத்தில் நிலைத்திருந்தார். தனது ஈமானில் எவ்வித பலவீனமும் வரவிடவில்லை. அல்லாஹ் இவரது தர்ஜாவை உயர்த்திக் கொண்டே செல்வானாக!

அங்கு நமது இன்னொரு முபல்லிக் அன்ஜும் பர்வேஸ் சாஹிப் இருக்கிறார்கள். அவர் எழுதுகின்றார்:

மர்ஹூம் மிகவும் கடினமாக கவனத்துடன் பணியாற்றி வந்தார். நான் அஹ்மதி என்பதால் இவ்வாறு செய்கிறேன் எனக் கூறி வந்தார். இதன் மூலம் மக்களுக்கு அஹ்மதிகள், உண்மையான, நேர்மையான, நல்லொழுக்கம் நிறைந்த மக்கள் ஆவார்கள் என்பது தெரிய வர வேண்டும் என்பார். இவருக்கு தப்லீகில் மிகுந்த ஆர்வம் இருந்தது. அங்கு தப்லீக் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. எனவே நான் நல்லொழுக்கம் மூலமாக மக்கள் மீது தாக்கம் ஏற்படுத்த முயற்சி செய்கின்றேன். இதன் மூலம் மக்களுக்கு தாமாகவே இதன் பக்கம் கவனம் ஏற்படும் எனக் கூறுவார்.

நாட்டுடன் அதிக அளவு பற்று கொண்டவர் ஆவார். இது அவருடைய கூற்றிலிருந்தே தெளிவாயிற்று. அவர் தனது நண்பர்களிடமும் நாட்டின் மீது நேசம் கொள்ளுங்கள். இதுதான் இஸ்லாத்தின் போதனை ஆகும் எனக் கூறி வந்தார். நான் அங்குள்ள நிலைமைகளைக் குறித்து குத்பா கொடுத்த போது, அந்த குத்பாக்களை நண்பர்களைக் கேட்கச் செய்தார். தீவிரவாதத்தை விட்டு விடுங்கள். அமைதியினை ஏற்படுத்தக்கூடிய மக்களாக ஆகுங்கள் எனக் கூறி வந்தார். ஆனால் தீய இயல்பைக் கொண்ட சிலர் இவருக்கு எதிராக இருந்தனர். அந்த அரசாங்க ஊழியர்கள் தான் இந்த அநீதியைச் செய்திருப்பார்கள் எனத் தெரிகிறது. இதன் மூலம் அன்னாருக்கு சஹாதத் என்ற அந்தஸ்து கிடைத்துள்ளது. அல்லாஹ் இவரது தர்ஜாவை உயர்த்திக் கொண்டே செல்வானாக! அல்லாஹ் இவரது பிள்ளைகளுக்கு பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக! இவரது பெற்றோர்களுக்கும் பொறுமையினை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **13.12.2013**

Translated by : Maulavi N. ZIAUL HAQ Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456